



# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## ‘பெருங்காற்றை’ எதிர்கொள்ளும் விசுவாசம்!

‘மரித்த லாசருவின் கல்லறை’ போன்ற பெரும் துயரங்கள் எத்தனை இருந்தாலென்ன? அவைகளை ‘ஜெயித்திடும் விசுவாசத்திற்கு’ ஒரு ரகசியத்தை இயேசு கற்றுக்கொடுத்தார்! ‘அந்த கல்லறைக்கு’ முன்நின்று “வானத்தை அண்ணாந்து பார்த்து, கண்களை ஏறெடுத்து” ஸ்தோத்திரம் செய்தார்! இப்போது ‘கல்லறையைப் பார்த்து’ கட்டளையிட, அவன் உயிர் பெற்றான்! சங்கீதம்148:1-ல்

“முதலாவது” வானங்களை ஏறெடுத்து பரமண்டல தேவனையும், அவரது உன்னத மகத்துவங்களையும் துதித்தபிறகே, சங்கீதம்148:7-ம் வசனத்தில் ‘பூமியிலுள்ள துயர சம்பவங்கள்’ நம் கண்களுக்கு சிறியதாய் தோன்றும்! விசுவாசம் பிறக்கும்! 8-ம் வசனத்தின்படி “அவர் சொற்படி கேட்கும், பெருங்காற்றே!” என நாம் கூறும் விசுவாசம்! ஆம், அவர் கட்டளையிட, அவர் சொற்படி கேட்டு லாசரு உயிர்பெற்றான்! (யோவான்11:43). உங்களின் நெஞ்சம் அமைதி பெறும்!!

*-tr*

அக்டோபர் 2019

பெட்டகம் 21

பரல்கள் 10



## ஈட்டியா? சங்கீதமா? சபையில் ‘சங்கீதங்கள்’ நிறையட்டும்!

‘ஒரு பெலிஸ்தியன்’ கோலியாத்தை கொன்ற தாவீதை, ‘யுத்த அதிகாரியாய்’ தன்னோடு வைத்துக்கொண்டான் சவுல். தாவீதை அனுப்பிய யுத்தமெல்லாம், மிகுந்த புத்தியாய் ஜெயித்தான்! (1சாமு.18:2,5). கணக்கின்படி, சவுல் ஆயிரம் பெலிஸ்தியரையும், தாவீதோ குறுகிய காலத்தில் பதினாயிரம் பேரையும் கொன்றான்! என ஸ்திரீகள் ஏதேச்சயாய் பாடி “தாவீதைப் புகழ்ந்த வார்த்தை” சவுலுக்கு தாவீதின் மீது கோபத்தையும், பொறாமையையும் மூட்டியது! (1சாமு.18:7-9).

அது முதற்கொண்டு, சவுல் கையில் தாவீதை கொன்றுவிட ஈட்டியும், தாவீதோ “தான் தினந்தோறும் செய்கிறபடி.... தன் கையில் சுரமண்டல கீதமும் வைத்திருந்தான்!” (1சாமு.18:10). காய்மகாரமான பொறாமை சவுல் கையில் கோபமான ஈட்டியும், கர்த்தரை தன்னோடு வைத்திருந்த தாவீதின் கையிலோ ‘சங்கீதம்’ பாடும் சுரமண்டலமும் இருந்தது! அது, அவன் வாழ்வை பூரண 150-சங்கீதங்களாய் மாற்றியது! நம் வாழ்வில், வீட்டில், சபையில் இந்த “சங்கீதமே” நிறைந்திருப்பதாக!!

*-Ed*

**‘பரலோக பொக்கிஷங்கள்’** வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கிகணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** IndianBank-Koodal Nagar Branch,
A/c no: **502087685** IFSC Code: **IDIB000K150** (வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாச தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள், 207A- Zaheer Husain Street, Koodal Nagar,
(Thathaneri P.O.), MADURAI - 625 018, S.India. Cell: 9843049935 Ph (O) 0452 - 2662306,
**Email: rathnakumar.t@gmail.com** *தமிழ்வலைதளம்*: **paralogapokkishangal.com, tamil.cfcindia.com**
**You Tube : paralogapokkishangal**

## தேவனுடைய புத்திரர்களே, சபையில் பொறுப்புள்ளவர்கள்!

***நா**ம் பரலோகம் செல்லவேண்டுமென்பதற்காக தேவன் நம்மைத் தெரிந்து கொள்ளவில்லை. துரதிருஷ்டவசமாய், ஏராளமான பிரசங்கங்கள் 'நாம் சாகும் போது பரலோகம் செல்வதையே' பெரிதாய் கூறுகின்றன. நாம் மரித்தவுடன் பரலோகம் செல்லவேண்டும் என்பதற்காக தேவன் நம்மை தெரிந்து கொண்டார் என உரைக்கும் வசனத்தை, வேதாகமத்தில் நீங்கள் எங்கும் காணமுடியாது. தேவன் நம்மைத் தெரிந்து கொண்டதோ....*

**நாம் பரலோகத்திற்கு போவதற்கு முன்பாக, இந்த பூமியில் பரிசுத்தமும், குற்றமற்றதுமான ஒரு வாழ்க்கையை வாழ்வதற்காகவே தேவன் நம்மைத் தெரிந்து கொண்டார்!**

*அநேக பாமாலைகளில், நாம் மரித்தவுடன் பரலோகம் செல்வோம் என்ற வாக்கியத்தையே பாடுகிறோம்! ஆனால் நாம் பரிசுத்தமும் பிழையும் இல்லாத வாழ்க்கை வாழ்ந்திட தேவன் நம்மை தெரிந்து கொண்டார் என்ற பாமாலைப் பாடல்களை நாம் அதிகமாய் கேட்க முடிவதில்லை. வேதத்தின்படியே, நம் மனநிலையை நாம் மாற்றி கொள்ளவேண்டும். எபேசியர் அதிகாரம் 1 முதல் 3-அஸ்திபார செய்தியாகும். அந்த அஸ்திபாரத்தில் போடப்படும் கற்களில், ஒரு கல் கூட "நாங்கள் மரித்தவுடன் பரலோகம் செல்ல அழைக்கப்பட்டோம்" என கூறுவதில்லை! மாறாக, அஸ்திபாரத்தில் உள்ள கல் கூறுவதெல்லாம் "தேவன் எங்களை, அவருக்கு முன்பாக பரிசுத்தமும் பிழையுமில்லாது வாழும்படியே தெரிந்து கொண்டார்" என்றே கூறும்!*

*ஒரு கட்டிடத்தின் அஸ்திபாரம் பெலவீனமாய் இருந்தால், அந்தக் கட்டிடம் விழுந்து விடும்! உங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தின் அஸ்திபாரம் பெலவீனமாய் இருந்தால், உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை கண்டிப்பாய் வீழ்ச்சி அடையும்! அநேக கிறிஸ்தவர்களிடம் எபேசியர் 1-3 அதிகாரங்களின் உறுதியான அஸ்திபாரம் இல்லாமலே இருக்கிறது. ஆகவேதான், அவர்களின்*

*பிற்கால ஜீவியத்தில் மிகப்பெரும் வீழ்ச்சி அடைகிறார்கள்! உங்கள் கட்டிடத்தின் நான்காவது மாடியில் விரிசல் ஏற்பட்டு விட்டால், அதன் முக்கிய காரணம்,* **அஸ்திபாரம் போதிய வலிமை கொண்டதாய் இல்லை** *என்பதாகவே இருக்கும். ஆனால் சில கட்டிடங்கள் 100 மேல்மாடி தளங்களைக் கொண்டிருந்தாலும், ஒரு விரிசல் கூட காணப்படுவதில்லை! ஏனென்றால், அந்த கட்டிடத்திற்கு ஒரு ஆழமான உறுதியான அஸ்திபாரம் உள்ளது என்பதுதான்! இவ்வாறாகவே, கிறிஸ்தவ ஜீவியமும் இருக்கிறது.*

**நீங்கள் மறுபடியும் பிறந்து 15 வருடங்களுக்குப் பிறகு பின்மாற்றம் அடைந்தால், உங்களின் கிறிஸ்தவ ஜீவிய ஆரம்பத்தில், ஒரு நல்ல அஸ்திபாரத்தைப் போடவில்லை என்பதேயாகும்.**

*நீங்கள் பிரதானமாய் தேவனிடமிருந்து 'ஆவிக்குரிய ஆசீர்வாதங் களையே தேடி' சரீர மற்றும் உலகப்பொருட்களின் ஆசீர்வாதங்களைத் தேடவில்லை என்பதை முதலாவதாக உறுதிப்படுத்துங்கள். இந்த பூவிடத்தில் அல்ல, பரலோக ஸ்தலத்தின் ஆசீர்வாதங்களை நீங்கள் தேடுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்! நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்! நீங்கள் பரலோகம் செல்வதற்கு அல்ல,* **அவருக்கு முன்பாக பரிசுத்தமும், பிழையுமில்லாத வாழ்க்கை வாழ்வதற்கே** *தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டீர்கள்! என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.*

*1:4,5-ம் வசனங்களில் "தமது அன்பினால் நம்மை முன்னறிந்தார்" என காண்கிறோம். "முன்னறிந்தார்" என்ற வார்த்தை, தவறாய் புரிந்து கொள்ளப்பட்ட அநேக வார்த்தைகளில் ஒன்றாகும். எதற்காக தேவன் நம்மை முன்னறிந்தார்? பரலோகம் அல்லது நரகத்திற்குச் செல்லவா முன்னறிந்தார்? இல்லை! அவர், ஒருவரைக்கூட பரலோகமோ அல்லது நரகமோ செல்வதற்கு முன்னறியவில்லை. இங்கு நமக்கு கூறப்பட்டதெல்லாம் "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் அவருக்குப் புத்திரர்களாய் இருக்கும்படியே முன் குறித்திருக்கிறார்" என வாசிக்கிறோம். நாம் குழந்தை கிறிஸ்தவர்களாக அல்ல, கிறிஸ்துவுக்குள் குமாரர்களாய் முதிர்ச்சி பெறவே நம்மை முன் குறித்துள்ளார்.*

**நீங்களோ 'உங்கள் பரம பிதாவின் அலுவல்களில்' ஆர்வமுடன் ஈடுபாடு கொண்ட ஓர் பொறுப்புள்ள மகனாய் இருக்க வேண்டும்!**

*ஆகவே ஒரு குமாரனுடைய பொறுப்புள்ள உணர்வோடு, தேவனுடைய காரியங்களில் நடந்து கொள்ளுங்கள். ஒரு தகப்பன்,*

*தன்னுடைய 25 வயது மகனை தனது நிறுவனத்தில் அமரச் செய்வதற்கும், தன்னுடைய 4 வயது மகனை அந்த நிறுவனத்தில் அமரச் செய்வதற்கும் என்ன வித்தியாசம் உள்ளது? அந்த 4 வயது மகன், அவனுடைய நண்பர்கள் அழைத்தவுடன், அவர்களோடு விளையாடுவதற்கு ஓடி விடுவான். ஆனால் 25 வயது கொண்ட மகனோ, தகப்பனின் நிறுவனத்தில் உண்மையுள்ளவனாய் பணியாற்றி, தேவையிருந்தால் நடுஇராத்திரிவரை கூட, பணியாற்றுவான்! இதுவே, ஒரு புத்திரனுக்கும் ஒரு குழந்தைக்கும் உள்ள வித்தியாசம்!*

*தேவனுடைய சபையில், வெகு குறைவான புத்திரர்களே, தேவனுடைய பணியில் அதிக பொறுப்புள்ள உணர்வு கொண்டிருக் கிறார்கள். தங்கள் பணியைக் குறித்தே அக்கறை கொண்டு, அவர்கள் சிந்தை முழுவதும் 'அதுவாகவே' நிறைந்திருக்கும்.*

**அவர்கள் சம்பளத்திற்காக பணியாற்றுவதில்லை! ஒரு பொறுப்புள்ள உணர்வி னிமித்தமே அவர்கள் ஊழியம் செய்தார்கள்.**

*சபையில் குழந்தைகளும் இருக்கிறார்கள்...... ஆனால் அவர்கள் ஒருபோதும் வளர்ச்சி அடைவதில்லை. அவர்களுடைய ஆர்வமெல்லாம் களியாட்டுகளும், பொறுப்பில்லாது ஜாலியாக இருப்பதும், சபை மேடையிலுள்ள இன்னிசைக் கருவிகளில் ஆசையாயிருப்பதும் மாத்திரமே வைத்திருக்கிறார்கள்! இவர்களோ, அற்ப-சொற்ப ஊழியத்தை செய்துவிட்டு, தேவனுடைய பணியில் சிறிது கூட பொறுப்பில்லாது வாழ்பவர்கள். இவர்கள் சபை கூட்டங்களில் வந்து அமர்வார்கள்! பிரசங்கம் கேட்பார்கள்! இதைத்தவிர சபைக்கென்று யாதொன்றும் செய்வதற்கு முன்வர மாட்டார்கள். இவர்கள் புத்திரர்களா? இல்லை, குழந்தைகள்!*

*– சகரியா பூணன்*

---

## 'ஒரு ஓநாயை ஆட்டுக்குட்டியாய் மாற்றிவிட்ட' சிலுவை பாதை!

*அரண்மனைக்கு வெளியில் வாழ்ந்த நான், பல்வேறு துன்பங்களைக் கடந்து சென்றபோது,* **என்னுடைய இருதயமோ, தேவனால் பரிசுத்தமாய் காக்கப்பட்டு** *வந்ததை உணர்ந்தேன். எனக்கு விரோதமும், தீமையும் செய்தவர்கள், பல்வேறு சிக்கலில் வீழ்ந்து வீழ்ச்சி அடைந்தார்கள் என, நான் கேள்விப்பட்டபோது, என்னுடைய இருதயமோ அதைக் குறித்து "வீண் மகிழ்ச்சி அடையாதிருக்க" தேவன் என் உள்ளத்தை ஆண்டுகொண்ட கிரியை, மகா அற்புதம் என்றே சொல்லுவேன். மேலும் தீது செய்தவர்களின் வீழ்ச்சியை, நான் மற்ற வர்களுக்கு தெரியப்படுத்தும் தீமையிலிருந்தும் காக்கப்பட்டேன்!*

இதனிமித்தமாய் நான் தேவனுக்கு சொல்லொண்ணா நன்றியுடையவளாயிருக்கிறேன்!

இந்நேரத்தில் நான் அனுபவித்த மற்றொரு நிகழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். என் கணவரோடு வாழ்ந்த காலங்களில், நான் அடைந்த இன்னல்களின் வேதனை தாங்க முடியாதவளாய், எங்கள் பட்டணத்திற்கு அடிக்கடி வரும் ஒரு ஆவிக்குரிய பண்டிதரிடம், என் நிலைமையை எடுத்துக்கூறி ஆலோசனை கேட்க விரும்பினேன். அதற்குரிய நாளை முன் குறித்து தரும்படி, 'நாள் கேட்டு' கடிதம் எழுதினேன். கடிதம் எழுதின சில நாட்களில் என் உள்ளத்திலிருந்து தொனித்த தேவ சத்தம் "நான் தந்த நுகத்தை உதறிவிட்டு, ஆலோசனை என்ற பெயரில் விசால வாழ்க்கையை நாடுகிறாயோ?" என கூறக் கேட்டேன். நான் உடனடியாக, ஆவியானவரின் குரலுக்கு செவிமடுத்து, அந்த ஆவிக்குரிய வேத பண்டிதருக்கு கடிதம் எழுதினேன்: அதில், "தாங்கள் என்னை தயவாய் மன்னித்து கொள்ள வேண்டும். நான் உங்களுக்கு முன்பு எழுதின கடிதம் 'என் சுய அனுதாபத்தைத்தேடி' எழுதிய கடிதம். தயவாய் மன்னித்து, அந்த கடிதத்தை நிராகரிக்க வேண்டுகிறேன்!" என எழுதி கடிதத்தை அனுப்பிவிட்டேன்.

"ஒரு ஆத்துமா, தேவனுக்கு உண்மையாயிருக்க" நாடும்போது, நான் எழுதிய கடிதத்திலுள்ள 'கிறிஸ்தவ எளிமை குணத்தை' அந்த வேத பண்டிதர் புரிந்து கொள்வார் என்றே நம்பிக்கையாயிருந்தேன். ஆனால் இந்த இரண்டாவது கடிதத்தைப் பெற்ற அவர், என்மீது கடுமையாக கோபம் கொண்டார். அது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. ஏனெனில், அவர் உயர்ந்த தேவ பண்புகளை உடைய ஆவிக்குரிய ஆசான் என்றே அநேகர் என்னிடம் கூறியிருந்தார்கள். மெய்யாகவே, அவரிடம் நற்குணமும், நிறைந்த ஜீவியமும் இருந்திருக்கக்கூடும்! ஆகிலும் அவரோ "**கிறிஸ்துவுக்குள் மரித்து அடைந்திடும் ஜீவனுக்குரிய வழியை அறியாதவர்!**" என்பதை மாத்திரம் விளங்கிக்கொண்டேன்.

இவ்வேளையில் நான், என் ஆவியில் களிகூர்ந்து "ஓ என் தேவனே, நீர் என்னை நடத்தி வந்த சிலுவைப் பாதைக்கு மிக்க நன்றி. இதை, என் கடந்த கால வாழ்க்கையில் நான் கண்டுபிடிக்கச் செய்த உமது தயவை எண்ணி உம்மைப் போற்றுகிறேன்! உம் நாமம் என்றென்றும் வாழ்க! உம்முடைய தயவிற்கு என்னை ஒரு சாட்சியாக அழைத்ததற்காய், உமக்கு அடிபணிகிறேன்!" என கண்ணீர் மல்க ஜெபம் ஏறெடுத்தேன்.

இச்சமயத்தில் நான் கண்ட ஜீவ மார்க்கத்தின் மற்றொரு இரகசியத்தைக் கூற விரும்புகிறேன்: அவர் தம்முடைய தயவின்படி

என்னை நடத்துவதற்கு சித்தம் கொண்டிருந்த, மற்றொரு ஆச்சரியமான பாதை என்னவென்றால் **'கலங்களான தெளிவற்ற பாதை'** என் ஆத்துமாவை மரணத்திற்கு ஊற்ற உதவும் சிறந்த பாதை என்பதைக் கண்டேன். இந்தப் பாதையில், என்னை ஆதரிக்கும் யாதொரு ஊன்று கோலும் இல்லாதிருப்பதைப்போல் கண்டேன். ஆனால் இந்த தெளிவற்ற பாதை நடத்திச் சென்ற கடைசி கரைப்பகுதியில், ஏராளமான அவருடைய திவ்விய சுபாவங்கள் என்மீது பொழிந்ததைக் கண்டேன். கலக்கம் நிறைந்த தெளிவற்ற அந்த பாதை "நெருப்பு உலையில் தங்கம் சுத்திகரிக்கப்பட்டதைப் போல்" என் ஆத்துமாவில் படிந்திருந்த அத்தனை அழுக்குகளும், சுய நலன்களும் எரிந்து போனதைக் கண்டேன்! மேலும், சுய சித்தத்தின் நிறைவில் "எனக்குள் வைத்திருந்த நியாயந்தீர்க்கும் தீய குணம் ஒழிந்து, ஒரு குழந்தையைப்போல் தேவ சித்தத்திற்கு இணங்கி கீழ்ப்படிவதையும்" கண்டேன். மேலும் 'சிறு சிறு விஷயங்களுக்கும்' மனம் துவண்டு எதிர்த்து நின்ற நான், இப்போதோ, உடனே அவைகளுக்கு இணங்கிச் செல்லும் விடுதலை வாழ்வைக் கண்டேன். திவ்விய சுபாவம் அடைய வேண்டும் என்பதற்காக அல்லாமல், என்னுடைய கேடான சுய சுபாவம் ஒழிந்து 'இயற்கையாகவே' என் உள்ளத்திலிருந்து திவ்ய சுபாவம் புரண்டு ஓடியதை உணர்ந்தேன். அதே வேளையில், முன்பிருந்த ஆத்தும அல்லது மனுஷீக குணம் என்னைவிட்டு ஒழிந்து போனதையும் கண்டேன்! இன்னும் அதிகமாய் மாயையின் மீது ஓரளவு சிநேகம் கொண்டிருந்த என் ஜீவன் ஒழிந்துபோய், தரித்திரத்திலும், குறைச்சலிலும், சிறுமைப்படுவதிலும் மனம் இசைந்து போவதை உணர்ந்தேன்!

> தெளிவில்லாத, கலங்கலும் சஞ்சலமுமான பாதை வழியில், நான் என் ஆத்துமாவை மரணத்திற்கு ஊற்றி கண்டடைந்த மற்றொரு ஜீவன் என்னவென்றால், மற்ற எல்லாரைக்காட்டிலும் என் சுயம் மேலோங்கி நிற்க விரும்பிய நிலை மாறி, இப்போது எல்லோரும் என்னைக் காட்டிலும் மேலானவர்கள் என்ற பாக்கியமான இடத்திற்கு என்னைக்கொண்டுவந்து சேர்த்தது!

தேவன் எனக்குத் தந்த அயலாகத்தாரிடம், அவர்களுடைய பெலவீனத்தையும், தவறுகளையும் தாங்கிக் கொண்டு, தாராள உதாரத்துவத்தோடு, அவர்களை அன்பினால் ஆதாயம் செய்ய உந்தப்பட்டேன்! இதுபோன்ற தாராள உதாரத்துவத்தை நான் முன்பு செய்திருந்தாலும் 'ஒரு விதமன நெருக்கத்தில்' அவ்வாறு செய்தேன். இப்போதோ 'ஜீவ நதிபோல்' அந்த ஈகையின் செயல் என்னிலிருந்து

பாய்ந்தோடியது. இவ்வாறு "**தெளிவற்ற, கலங்கிய, சிலுவை பாதையில்**" நான் பெற்ற ஏராளமான ஆவிக்குரிய நன்மைகளை, நான் ஒரே வாக்கியத்தில் கூற வேண்டுமென்றால், "ஓர் ஊளையிடும் ஓநாய், ஆட்டுக்குட்டியின் சாந்தத்தைக் கண்டடைந்தது" என்றே கூறி, என் ஆண்டவரை மகிமைப்படுத்துகிறேன்!

– மேடம் குயான்

---

## 'பக்தியின் சீற்றம் கொண்ட' கிறிஸ்தவ சேவகர்களே வேண்டும்!

**வே**தாகமத்தில் இயேசு கூறும் 'விதை' பலன் தரும் சூத்திரம் முற்றிலும் மாறானது! அதாவது, தேவ வார்த்தையாகிய நல்ல விதையை நல்லவன் விதைத்தாலும், கெட்டவன் விதைத்தாலும்.... விதை நியமனப்படி, ருசியுள்ள 'அத்திப்பழம்' இருவரின் பலனுக்கும் வராது! " ஒரே பக்தியான தேவசெய்தியை" **வெவ்வேறு தேவபக்தி தரத்தின்படி** விதைக்கிறவர்களுக்கு ஏற்றபடியே, வெவ்வேறு வித பலன்களை மக்களிடம் கொண்டு வந்து சேர்க்கும்! இப்போது விளங்கிக் கொண்டீர்களா? **'கிறிஸ்தவம்' தன்னகத்தே உடையவனின் தரத்தின்படியே பலனை ஈட்டித்தரும்!**

உலகத்தால் கறைப்பட்ட மனதும், ஆவிக்குரிய பழுதடைந்த நிலையும் கொண்ட ஒரு சபை, திரை கடலோடி தூர தேசம் பயணித்து, சுவிசேஷத்தை அறிவித்தாலும்.... அந்த கறைப்பட்ட சபையின் தரத்தின்படியே, அந்த மக்கள் உருவெடுப்பார்கள்! ஆம், 'வார்த்தையாகிய தேவ வசனம்' வெறுமனே பலன் தருவதில்லை.... அந்த நற்பலன், அதை அறிவிக்கும் அல்லது சாட்சி பகரும் மனிதனின் அல்லது சபையின் தரத்தை வைத்தே நற்பலன் தரும் என்பதை நாம் யாவரும் அறிந்து, விழிப்புள்ள ஜீவியம் செய்திடக்கடவோம்! இக்கரையில் இவனது ஜீவியம் அல்லது சபையின் தரம் எப்படியோ.... அப்படியே, அக்கரையிலும் விளங்கும்! இது ஓர் மாறாத தெய்வ பிரமாணம்!!

**செடியோடு ஒட்டப்படும் கிளையைப் போலவே சுவிசேஷ ஊழியம் உள்ளது. செடி நல்லதாயிருந்தால் மாத்திரமே, ஒட்டப்படும் கிளையும் நல்ல கனி தந்திட முடியும்! அதுபோன்ற, மகா உத்திரவாதமான தேவபக்திக்குரிய ஜீவியத்தையே இயேசுகிறிஸ்து இந்த பூமியில் சோதிக்கப்பட்டு வாழ்ந்து, பிறரை சுவிசேஷத்தால் ஆசீர்வதித்தார்!**

இன்றைய சபைகளில் காணப்படும் பிரபல்ய தோற்றமே "உலகமெங்கும் போய் நாங்கள் சுவிசேஷம் அறிவிப்போம்!" என்பதுதான். ஆனால், சபைகளின் இவ்வித நிலைப்பாடு மிகவும்

*தவறு!! எந்த சபையாய் இருந்தாலும், பிரதானமான முதல்பகுதி "இவர்கள் ஆவிக்குரிய ரீதியில் தகுதி கொண்டவர்கள்தானா?" என்பதுதான்! "**புறப்பட்டு போங்கள்!**" என ஆண்டவர் கட்டளை பிறப்பித்தது உண்மைதான்... ஆனால், அதே சமயத்தில் "**காத்திருங்கள்!**" எனவும் கட்டளையிட்டதை காணாத 'கண் மூடிகளாய்' நாம் இருக்கலாகுமா? (மத்.28:19; லூக்.24:49). இப்போது சொல்லுங்கள், எது முதலாவது நிகழ வேண்டும்? ஆம், புறப்பட்டு போவதற்கு முன்பாக, காத்திருப்பதே முதலாவது நிகழ வேண்டும்!*

*இயேசுவின் சீஷர்கள், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக 'மிஷனரிகளாய்' புறப்பட்டுச் சென்றிருந்தால்.... சொல்லொண்ணா ஆவிக்குரிய சேதம் ஏற்பட்டிருக்குமே! மேற்கத்திய நாடுகள் தொடங்கி, உலகமெங்கும் சென்ற அவர்களின் சுவிசேஷம் "வெகு மோசமான பலனையே" கிறிஸ்துவிற்கு கொடுத்திருக்கும்! புறஜாதியரிடம் சென்று, தரம் குறைந்த ஜீவியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது ஒன்றும், கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்றுவதாய் பொருளாகாது! நமது உள்ளம் நடுங்கும் விதமாய், இயேசு உரைத்த வார்த்தைகளைக் கவனியுங்கள்.... "ஒருவனை உங்கள் மார்க்கத் தானாகும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்! பின்பு.... அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்!!" (மத்.23:15). இயேசுவின் இந்த வார்த்தைகள் என்னில் நிரந்தரமான "தெய்வ பயத்தைத்" தந்துள்ளது!!*

*இன்றைய சபைகளின் சுவிசேஷ பிரகடன தரம், இயேசு சுட்டிக் காண்பித்த எல்லையிலிருந்து வெகுவாய் சீரழிந்து தாழ்ந்துபோய் கிடக்கிறது! சபைகள் போகிற போங்கினைப் பாருங்கள்....* "**உலகமும் அதன் மாசுகளும் அன்றாட நடைமுறை வாழ்விற்கு தேவையே!**" *எனக் கூறும் கதியில் சரிவடைந்துள்ளது! நம் சுவிசேஷ பாங்கு "சமூக சமரசம்" என தேய்ந்து "ஆவிக்குரிய" ஒப்பற்ற நிலையை இழந்து காணப்படுகிறதே! தனி நபர் தொடங்கி, சபை மட்டும் ஆராதனையின் புனிதம், அவர்களின் இஷ்டத்திற்கு பிய்த்து - நார்நாராகிப் போய் விட்டது!*

**இன்று எந்த சபைகளில் "புனிதர்கள்" உருவாகி வருகிறார்கள்? சபையின் உற்பத்தி அனைத்தும் "சினிமா கலையோடு" கைகோர்த்து விட்டதே!**

*வியாபார விளம்பரதாரர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் சபைகளின் ஊழிய அவல நிலை பாருங்கள்! இன்றைய கிறிஸ்தவ வீடுகள், சினிமா கொட்டகையாய் உருமாறி உள்ளதே! கிறிஸ்தவ புனித பத்திரிக்கை ஊழியம், சாரம் இழந்த பதர்களாய் போனதே!*

*இதையெல்லாம் கண்டு துயருற்று அக்கறைப்பட ஒருவரும் இல்லாததுபோலவே காணப்படுகிறது!*

*மாற்றம் வேண்டும்.... அது இப்போதே நடைபெற வேண்டும்! ஆதிநிலை போன்ற உத்தம சீஷர்கள் எழும்ப வேண்டும்.... இல்லையேல், இனி அடுத்த இருபது அல்லது முப்பது ஆண்டுகளில்,* **"உண்மை கிறிஸ்தவன் ஏது?"** *என்ற வெறுமை நிலை ஏற்பட்டுவிடும்! போதும்.... போதும், அரை - குறை கிறிஸ்தவர்களின் உற்பத்தி போதும்! பக்தியின் சீற்றத்தில் எழுந்து, இன்றைய உலகத்தை தலைகீழாய் புரட்டி வாழும் கிறிஸ்துவின் சேவகர்களே இன்றைய நமது அவசரத் தேவை!!*

*– A.W. டோசர்*

---

## 'ஆவியின் நிறைவே' வாழ்வின் கடினங்களை வென்றிடும்!

***நீ**ங்கள் மெய்யாகவே ஆவியினால் நிறைந்திருக்கிறீர்களா? உங்கள் ஆவியின் நிறைவை சோதிப்பதற்கே வாழ்வின் கடினங்கள் உங்களுக்கு சம்பவிக்கிறது என்பதை அறிவீர்களாக!*

*இங்கே பாருங்கள், மூன்று வாலிபர்கள்.... சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ! இவர்கள் முன் இருந்தது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா.... கொடிய "எரிந்து கொண்டிருக்கும் அக்கினி சூளை" அந்த அக்கினி சூளை, வேறு யாருக்கும் அல்ல 'இவர்களைத் தூக்கி போடுவதற்கே'* **எரிந்து கொண்டிருக்கும் அக்கினி சூளை!** *ஆகிலும் இந்த எபிரெய வாலிபர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? அது, துதியைவிட இன்னும் வலிமையான அறிக்கை என்றே கூற வேண்டும். இந்த மூன்று இளைஞர்களோ, அந்த எரிதழலை மூட்டிய ராஜாவைப் பார்த்து "நேபுகாத்நேச்சாரே, இந்த காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்" (தானியேல்.3:16,17).* **நன்றாய் கவனியுங்கள், இந்த காரிருள் நேரத்தில், ஒருவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்காவிடில் இத்தனை வலிமையான துதியின் அறிக்கையை கூறவே இயலாது!**

*உங்கள் வீட்டின் மாடியில் இருக்கும் உங்கள் மகள் "அம்மா! அம்மா! அண்ணன் ட்ரெசிங் கண்ணாடியை உடைத்து விட்டான்! என் காலில் இரத்தம் கொட்டுகிறது" என கூவி அழும்போது உங்கள் முழு வீடும் ஆத்திரமும், அவசரமும் அடையும் அல்லவா? இந்த சூழ்நிலையிலும் நீங்கள்* **ஆவியின் வல்லமையினால் அமைதியாய் இருக்கவும், தொடர்ந்து ஸ்தோத்திரம் செய்யவும் முடியும்!**

*மற்ற ஒரு உதாரணத்தைப் பாருங்கள். பவுல் கூறினார் "ஒன்றுமில்லாதவர்கள் என, எண்ணப்பட்டாலும், சகலத்தையு முடையவர்களாகவே எங்களை விளங்கப் பண்ணுகிறோம்" என கெம்பீரமாய் கூறினார் (2கொரி.6:10). யாரால் இப்படி கூற முடியும்? ஒருவனுக்குப் பணம் இருந்தால் மாத்திரமே, வங்கியில் சென்று பணம் எடுக்க பதட்டம் அவசியமில்லை. ஆனால் 'ஒன்றுமில்லாமலே' சகலமும் இருப்பதைப் போல் அமைதி காணும் ஓர் நிலை, ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாகும்! இதுபோன்ற நிலை "மதுபான வெறிகொண்டவர்களுக்கு" மாத்திரமே சம்பவித்திட முடியும். எது இல்லா விட்டாலும், மதுபான வெறிகொண்டவன் பாடுவான், தைரியமாய் நிற்பான், கலகலவென்று பேசுவான்! இது எப்படி சம்பவித்தது? அவன் 'வேறு ஒரு ஆவியில்' இப்போது இருக்கிறான். இதுபோலவே ஆவிக்குரிய மனுஷன், எந்த சூழ்நிலையிலும்.... "பரிசுத்த ஆவியை சார்ந்து கொண்டு" துதி ஏறெடுக்க முடியும்.*

**குடிப்பவன் முதலில் ஒரு கிளாஸ் குடிக்கிறான்.... அது அவனுக்குப் போதாது.... தொடர்ந்து பத்து கிளாஸ் குடித்து மதுபான வெறி நிலை அடைகிறான்! இந்த நிலையில்தான் அவன் சங்கீதம் பாடி மகிழ்ச்சியாயிருக்கிறான். அதுபோலவே, பரிசுத்த ஆவியைப் பருகிப் பருகி உங்கள் இருதயம் நிறையும் வரை பருகுங்கள். இவ்வாறு நிரப்பப்பட்டவன்தான் 'அந்த வெறி கொண்டு' எப்போதும் சங்கீதம் பாடி .... எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்தரிப்பான்!**

*மிகக் கொடிய சூழ்நிலை ஏற்பட்டதாக எண்ணி நீங்கள் துவண்டு போனீர்களோ? ஸ்தோத்திரம் செலுத்த விரும்பியும், உங்கள் உள்ளத்தில் இளைப்பாறுதல் இல்லையோ? இப்போது உங்களுக்குத் தேவையானது ஒன்றே ஒன்றுதான்: அந்த மனுஷனை போல.... ஆவியைப் பருகி பருகி* **இருதயம் நிரம்பும் வரை பருகுங்கள்!** *எதுவரை இவ்வாறு நிறைய வேண்டும்? உங்கள் இருதயம் ஆவியின் வலிமை கொண்டதாய், அந்த இருதயத்தை கர்த்தரே முழுவதும் ஆட்கொண்டதாய், கர்த்தருடைய மகிழ்ச்சியினால் பொங்கும்வரை ஆவியை பருகுங்கள்! இதுபோல கர்த்தருடைய ஆவியினால் வெறிகொள்ள உங்களால் முடியுமா? கண்டிப்பாய் முடியும்! எளிய விசுவாசம் கொண்டவனுக்கு முடியும்! ஆவியை குடித்து பருகிட "தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்தவனுக்கு" முடியும்! இதற்கு, இந்த அற்புத செயலுக்கு,* **உங்கள் விசுவாசம்** *உங்களுக்கு துணை நிற்கக்கடவது! குடித்து.... வெறித்து ஆனந்த களிப்படைந்தவன் மாத்திரமே 'எல்லாவற்றிற்காகவும்' ஸ்தோத்தரிப்பான்! அதுமட்டும் அல்ல, அவன் எல்லோரையும் பார்த்து "நீங்களும் எப்பொழுதும்*

*எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்தரியுங்கள்" என ஆர்ப்பரிப்புடன் கூறுவான்!!*

*செழித்த நடைமுறை வாழ்விற்கு, எவ்வளவேனும் பொய்யுரையாத தேவனின் கட்டளைக்கு செவிசாய்ப்போமாக. அது என்னவெனில் "நீங்கள் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1தெச.5:18).*

*மீண்டும், முடிவாய் கேளுங்கள்: நீங்கள் மதுபானத்தினால் வெறி கொள்ள வேண்டாம்.... ஆனால், தயவாய் "ஆவியினால் நிரம்பி வழியுங்கள்" அப்போது, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணுவது மாத்திரம் அல்லாமல், எல்லாவற்றிற்காகவும் பிதாவை ஸ்தோத்தரித்திட முடியும்! நிச்சயமாய் முடியும்!! (எபே.5:18,19,20) ஆமென்.*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

---

## 'நெஞ்சத்தின் அனலே' பிரசங்க பீடத்தின் ஜீவன்!

***ச**பையின் கடைசி நாட்களில் காணப்படும் சோகம் என்ன தெரியுமா? பிரசங்க பீடங்களை நிரப்பிக்கொண்டிருக்கும் செத்த பிரசங்கிகள்! அங்கிருந்து கொட்டும் செத்த பிரசங்கங்கள்! அவைகளையெல்லாம் கேட்க அமர்ந்திருக்கும் திரள் கூட்ட செத்த மனிதர்கள்!!* **'நெஞ்சில் அனல் இன்றி'** *பிரசங்கிக்கும் இவர்களின் பிரசங்கம் யாருக்கு ேண்டும்? இவர்களின் அனலற்ற பிரசங்கங்கள் சூரியனுக்கு கீழ் சம்பவிக்கும் வினோத அலங்கோலங்கள்!*

*நெஞ்சத்தின் அனலை, விவரிக்க இயலாது! ஆனால், தீப்பிழம்பான அந்த* **'அபிஷேக அனல்'** *என் நெஞ்சத்தில் இல்லை யென்றால், அதை நான் உணர்ந்திட மாத்திரமே முடியும்! அபிஷேக அனல் இல்லாத பிரசங்கம், ஜீவனை தருவது எக்காலத்தும் முடியாது! நெஞ்சத்தில் அனல் குன்றிய பிரசங்கி, மரண குழிக்குள் நிற்கும் 'மரண வாசனை' பெற்றவன்!*

> ஜீவன் தரும் வசனங்கள், அதை பிரசங்கிக்கும் பிரசங்கியின் மீது அபிஷேக அனல் இல்லையென்றால்...... 'அந்த ஜீவ வார்த்தையும்' ஜீவன் தராது! எதை பெற்றிருந்தாலும் பெறாவிட்டாலும், பிரசங்க மேடை நடந்து செல்லும் பிரசங்கி அந்த அபிஷேக அனலைத் தன் நெஞ்சத்தில் கண்டிப்பாய் பெற்றிருக்க வேண்டும்!

*பொய்யான தோற்றத்தில் 'பாதி அறிவாளியாய்' ஒருவன் தன்னை இவ்வுலகில் காட்டிட முடியுமென்றால்...... இதற்கு இரண்டு*

*மடங்குகள் அதிகமாய், ஒருவன் தன்னை* **'பொய்யான தோற்றத்தில்' ஆவிக்குரியவனாய்** *காண்பித்திட முடியும்! பிரசங்கம், ஓர் ஆவிக்குரிய உற்பத்தி சாலை! மூளை அறிவில் உற்பவிக்கும் பிரசங்கம், அமர்ந்திருக்கும் தலைகளுக்குத்தான் போய்சேரும்! நெஞ்சத்தில் உற்பவிக்கும் பிரசங்கம், அமர்ந்திருப்போரின் இருதயங்களில் போய் சேரும்!! தேவனை தலைமையாகக் கொண்டு வாழும் ஓர் ஆவிக்குரிய பிரசங்கி மாத்திரமே, ஆவிக்குரிய மனது கொண்ட ஜனங்களை உருவாக்கிட முடியும். இதற்குமாறாக, தூயஆவியின் அனல், பிரசங்கியின் பூட்டப்பட்ட ஆத்துமாவின் இரும்பு சிறைக்குள் பறந்து கொண்டிருக்கும் "ஒரு அப்பாவி மெல்லிய புறா" அல்ல!*

> மாறாக, அக்கினிமயமான தூயஆவியை, ஒருவன் தீராத வாஞ்சையோடு 'தீவிரமாய் தேடியே' சுதந்தரிக்க வேண்டும்!

*நெஞ்சத்தின் அனலை எப்படிப் பெறுவது? என, நீங்கள் வேத கலாச்சாலையில் கற்றுக்கொள்ள இயலாது! ஜெபம்...... ஆம், ஜெபம் ஒன்றே 'அனலை' சுதந்தரிக்கும் வழியாகும். தேவனுடைய போர் பாசறையிலிருந்து, ஜெபத்தில் மன்றாடி ஜெயித்து வந்தவனே, அந்த பிரசங்க போர்ச்சேவகன்!*

*பிரசங்க மேடையில் நின்றுகொண்டு, தன் புத்தக ஞானத்தை வெடிப்பவன், அல்லது ஜனங்களை சிரிக்க வைக்க பார்ப்பவன்...... அந்த பீடத்தில் வெற்றி காண இயலாது! மாறாக,* **ஜெபத்திற்கு தன்னை பூட்டிக்கொண்ட அறையே, ஜெயம் பெறும்!** *வெட்டு ஒன்று துண்டு இரண்டு போல், அந்த பிரசங்க போர்சேவகனுக்கு, பிரசங்க பீடம் ஏறுவதற்கு முன்பாகவே, ஜெயமா? அல்லது தோல்வியா? என்பது அவனுக்குத் தெரிந்து விடும். நெஞ்சில் குடிகொண்ட அக்கினி தணல், சக்திவாய்ந்த வெடிகுண்டு போன்றது! உங்கள் பிஷப், தலையில் கை வைத்து ஜெபித்தபடியால், இந்த மாபெரும் வெடிகுண்டு சக்தி உங்கள் மீது வந்திறங்காது! அல்லது, சிறையில் சோர்வுடன் முடங்கிவிட்ட பிரசங்கியின் மீது, வெண்பனியாய் வந்து அமராது! ஜெபத்தில் பெற்ற தீப்பிழம்பின் அக்கினி, பாய்ந்து ஊடுருவும்!...... பொசுக்கிப் போடும்!* **அதே சமயம், இனிமையும் தரும், கடினத்தை மென்மையும் ஆக்கும்!!** *மானிட உத்தியில் வெளிப்படும் சம்மட்டியும், மனுஷீக வைராக்கியமும், வெற்று தீ-யென தோற்றுப்போகும்! பிரசங்கியின் நெஞ்சில் குடி கொண்டிருக்கும் 'அக்கினியோ' கல்லான இருதயத்தையும் பிளந்து, ஜெயக்கொடி நாட்டும்!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

## ‘கிறிஸ்துவுக்காய் வாழத் துடிப்பவர்களே’ மெய் சபையார்!

*என் ஊழியத்தின் ஆரம்பத்தில், நான் தென்இந்தியாவிலுள்ள பல சபைகளில் ஆவிக்குரிய கூட்டங்களை நடத்தி வந்தேன். ஒரு கிராமத்துக்கு நான் போயிருந்தபோது, அங்குள்ள சபையைப்பற்றி உபதேசியார் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். அவர் தேவ பக்தியுள்ளவர். ஆகிலும் அந்த சபை, புதிதாக கிறிஸ்து மார்க்கத்துக்கு வந்த சபை! அவர்கள் இந்துக்களாயிருந்தபோது, அவர்களுக்கும் ஒரு எதிர்கோஷ்டிக்கும் இடையில் ஓர் வழக்கு நடந்துகொண்டிருந்தது. இதிலே மிஷன்காரர் உதவி செய்து வெற்றி கிடைத்தால், தாங்கள் எல்லாரும் வேதத்தில் சேர்ந்துவிடுவதாக வாக்குக்கொடுத்தார்கள்! வெற்றியும் கிடைத்தது! உடனே, எல்லாரும் குடும்ப சகிதமாக வேதத்தில் சேர்ந்தார்கள்!! அவர்களுக்காக அங்கே ஒரு சிறு கோவிலும் கட்டப்பட்டது. உபதேசியார் என்னைப் பார்த்து: “ஐயா,* **இவர்கள் கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்தபோதிலும் முன்னிருந்தபடியேதான் இருக்கிறார்கள்.** *இவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டாலன்றி, இவர்கள் வேதமார்க்கத்தில் சேர்ந்ததில் பிரயோஜனமில்லை! அதைப்பற்றித்தான் நீங்கள் முக்கியமாய் கோடிட்டுப் பிரசங்கிக்க வேண்டுமென்று” கேட்டுக்கொண்டார். இப்படித்தான் இன்று, அனேக சபைகள் உள்ளன!*

*நான் இரட்சகரை ஏற்றுக்கொண்ட ஆரம்ப காலத்தில், ஒரு கிராமத்து ஜனங்களெல்லாரும், மேல் ஜாதியாருக்கும் தங்களுக்குமுள்ள நிலத்தகராறில் மிஷன்மூலம் வெற்றிபெற்றதால் வேதத்தில் சேர்ந்தார்கள்! அக்கிராமத்துக்கருகில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த ஒரு வாய்க்காலில், காலஞ் சென்ற கால்டுவெல் ஐயா அவர்களும் பல குருமார்களும் சேர்ந்து, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததை நானும் கூடவே இருந்து பார்த்தேன். ஞானஸ்நானம் பெற்ற அவர்கள் கொஞ்சக் காலம் வேதத்திலிருந்தபின், மிஷனார் தங்களைக் கவனிக்கவில்லை என்று கோபித்துக்கொண்டு, மறுபடியும் இந்து மார்க்கத்துக்கே போய்விட்டார்கள்! இப்படியெல்லாம், கிறிஸ்தவ சபைகளில் கூடியிருப்பவர்களை நாம் என்னவென்று சொல்வது?*

**இவர்கள் மெய்யாகவே கிறிஸ்துவின் அன்பை அறிந்து, அவரை ஜீவனாக ஏற்றுக்கொண்டிருப்பார்களானால், என்ன நேரிட்டாலும் பின்வாங்க மாட்டார்கள்!**

*அவர்கள் இந்துக்களாயிருந்தபோதும் கிறிஸ்தற்றவர்களே! வேதத்தில் சேர்ந்த பின்பும் கிறிஸ்தற்றவர்களே! வருகிறவர்கள்*

குடும்பமாக வந்தாலும் சரி, கிராமமாக வந்தாலும் சரி, கிறிஸ்துவை அவர்கள் அறிந்து அவரை ரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு நன்மை உண்டாகும்! சபைக்கும் நல்லது!!

ஆதி அப்போஸ்தலர் காலத்தில், மூவாயிரம் பேர் சபையில் சேர்க்கப்பட்டதெப்படி? முதலாவது அவர்கள் இரட்சகரிடம் சேர்ந்து, அப்புறம் சபையில் சேர்க்கப்பட்டார்கள்! "இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்" (அப்.2:47). "அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய் சேர்க்கப்பட்டார்கள்" என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தி சொல்லப்பட்டிருந்தும், தொடர்ந்து 'போலி கிறிஸ்தவர்கள்' சபைகளில் இருந்து கொண்டே இருப்பது துயரம்.... மா துயரம்! (அப்.11:21,24). கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அவருக்குள் பிழைப்பவர்கள் அல்லது கிறிஸ்துவைப் போல் வாழ்ந்திடத் துடிக்கும் ஒரு கூட்ட ஜனமே, மெய்யான சபையாகும்!!

– பரமானந்தம் ஐயர்

---

## அன்பற்ற மனநிலை மாற்றும், கல்வாரி அன்பு!

**எ**ன்னுடைய ஆசிரமத்தில் நிகழ்ந்த மனக்கசப்பான நிகழ்ச்சிகள் என் உள்ளத்தை வெகுவாய் பாதித்தது. தேவ அன்பிலிருந்து வழிந்தோடும் ஊழியத்தின் பலனை அனுபவித்து வாழ்ந்த என்னுடைய ஆசிரமத்து மக்கள் 'ஆங்காங்கு கூடி நின்று' **இந்த ஊழியத்திற்கு விரோதம் பேசுவதைக் கண்டு, என் உள்ளத்தில் திகைப்படைந்தேன்.** இவ்வித கேடான நிலையை அயர்லாந்தில் உள்ள என் ஆவிக்குரிய நண்பர்களுக்கு விவரித்து நீண்டதோர் கடிதம் எழுதினேன். அடுத்த நாள் காலையில், அந்தக் கடிதத்தை தபாலில் சேர்ப்பதற்கு முன்பாக படித்துப் பார்த்தேன். அப்போதுதான் அந்த கடிதத்திலிருந்த **தெய்வ அன்பற்ற தன்மையை** நான் உணர்ந்தேன். அந்தக் கடிதத்தை கிழித்துப் போட்ட பிறகும்.... அவ்வாறு எழுதிய என் கடிதம் எனக்கே வெட்கமாகவும், துக்கமாகவும் இருந்தது!

ஆகிலும், சிலர்மீது நான் கொண்ட அன்பற்ற நிலை துரிதமாய் மாறவில்லை. எப்படியெனில் அவ்வப்போது அவர்களைப் பற்றி பிறரிடம் **பேசுவதும்,** அவர்களைக் குறித்து நான் **நினைக்கவும்** செய்த செயல், என் மனதை துக்கத்தில் ஆழ்த்தியது. நான் தேவனிடம் சென்று "ஓ தேவனே, ஆசிரமத்திலுள்ள சிலரைக் குறித்து அன்பற்ற கடிதம் எழுதுவதும், அன்பில்லாமல் அவர்களைக் குறித்து பேசுவதும், அவர்களின் செயலை மனதில் வைத்து அன்பில்லாத சிந்தை கொள்வதும் என்னால் மாற்ற முடியவில்லை.

**எவ்வித கசப்பான தீவினைகளையும் மாற்ற வல்ல மாமருந்து "கல்வாரி அன்பு" என்பதை நான் அறிவேன்.**

*இப்போதும் கர்த்தாவே, எனக்கு வெகு தூரமாய் இருக்கும் அந்த 'கல்வாரி அன்பினால்' என்னை ஆட்கொண்டருளும்! அது ஒன்றே என்னை முற்றிலும் கழுவி, தெய்வ அன்பினால் நான் நிலைத்திருந்து, உமது அன்பின் பலனை பிறருக்குத் தர நடத்துமென விசுவாசிக்கிறேன்" என தாழ்மை உள்ளத்தோடு வேண்டினேன்.*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## சத்தியங்களை 'ஆணித்தரமாய்' பிரசங்கித்திட வேண்டும்!

*சபைக்குத் தூணும் ஆதாரமுமாய் திகழ வேண்டிய சத்தியங்கள் யாவற்றையும், ஒரு பிரசங்கி 'திட்டவட்டமாய்' வலியுறுத்திப் பிரசங்கிக்கும்படி பவுல் தீத்துவிற்கு புத்தி கூறினார் (தீத்து.3:8). ஒரு முறை, ஒரு நடிகன் கீழ்கண்டவாறு கூறினார்: "நடிகர்களாகிய எங்களுக்கும் கிறிஸ்தவ பிரசங்கிகளுக்கும் இடையிலான வித்தியாசம் இந்த ஒன்றுதான்: சத்திய பூர்வமானவைகளை,* **நிஜமற்றதைப்போல்** *கிறிஸ்தவ பிரசங்கிகள் பேசுகிறார்கள்! ஆனால், நடிகர்களாகிய நாங்கள், நிஜமற்றவைகளை,* **சத்தியமானவைகள் போல பேசுகிறோம்"** *எனக் கூறினார்!*

*இவர் கூறியது உண்மைதான் என, இன்றுள்ள அநேக பிரசங்கிகளின் பிரசங்கங்கள் நிரூபிக்கின்றன! அவர்களுடைய பிரசங்கங்களில் யாதொரு அக்கினியும் இல்லை! எவ்வித பக்தி வைராக்கியமும் இல்லை! அல்லது அவர்களுடைய ஊழியங்களில் துடிப்புள்ள வாஞ்சையும் காணப்படுவதில்லை! நித்தியத்திற்குரிய விஷயங்களையும், நித்திய ஜீவனைப்பற்றியும், ஜனங்கள் என்றென்றும் வாதிக்கப்படும் எரிநரகத்தைப் பற்றியும், இவர்கள் பேசும்போது, சோம்பலான அழுது வடியும் தோரணையில் பேசுகிறார்கள்!*

*இதுபோன்ற பிரசங்கிகளை யார் நம்புவார்கள்? நீங்களோ, எக்காலத்தும், இவ்வித பிரசங்கிகளாய் இருக்காதீர்கள்!*

*சிலர், தாங்கள் மறுபடியும் பிறந்ததாக கூறினாலும், அவர்கள்* **வேத வசனமாகிய பாலின் மீது அனுதினமும் வாஞ்சை** *கொண்டிருக்க இல்லையென்றால், அதுபோன்றவர்களின் மறுபிறப்பின் 'அசல் தன்மையை குறித்துக் கூட' நான் நிச்சயமாய் கேள்வி எழுப்புவேன். நான் பிறந்தநாள் முதல் 'வேத வசனத்தில் யாதொரு வலியுறுத்தலும் இல்லாத' ஒரு சபையிலிருந்து வந்தவன். ஆனால், நான் மறுபடியும் பிறந்தபிறகு, ஒவ்வொரு நாளும் வேத வசனத்தின் மீது என் இருதயம் வாஞ்சையுடன் கதறியது.*

*நான் தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்படி ஒருவரும் எனக்கு போதிக்க வேண்டிய அவசியம் இருந்ததில்லை! இதுபோன்ற அனுபவம் கொண்ட அனைவரும், மெய்யாகவே மறுபடியும் பிறந்தவர்கள்! ஆகவே, வேத சத்தியங்களை வலியுறுத்தி பிரசங்கிக்காத பிரசங்கிகள், அடிப்படை பூர்வமாக* "**மறுபடியும் பிறக்காதவர்களாய்**" *இருக்கக்கூடும் என்றே, நான் சந்தேகிப்பதுண்டு!*

**வேதாகமம், "தேவனுடைய வார்த்தை" என்பதை நீங்கள் திட்டவட்டமாய் விசுவாசிக்க முடியவில்லையென்றால், நீங்கள் ஒருக்காலும் பிரசங்கிக்க முன்வரக்கூடாது! நீங்கள் எங்கேயாவது சென்று வியாபாரம் செய்யுங்கள் அல்லது ஒரு அலுவலகத்தில் சேர்ந்து பணி புரியுங்கள்!**

*இதற்கு மாறாக, சபையில் உங்கள் வாயைத் திறந்து பேசி, ஜனங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தாதீர்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தால், அதை திட்டவட்டமாயும், அதிகாரத் தோடும் பிரசங்கியுங்கள்!*

*வேதப்புத்தகம், தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டதென என் முழு இருதயமாய் நான் நம்புகிறேன். அவை அனைத்தும், மாறாத சத்திய வார்த்தைகள். ஆகவேதான், நான் அதை திட்டவட்டமாய் வலியுறுத்திப் பேசுகிறேன்! ஏனென்றால், அவை அனைத்தும் உண்மையானவைகள் என இன்றும் நான் அதிகமாய் உணர்த்து விக்கப்பட்டிருக்கிறேன். என் ஜீவிய காலத்தில் தேவனுடைய புத்தகத்திலுள்ள* **வாக்குதத்தங்கள் அனைத்தும் உண்மையானவைகள்** *என நிரூபணமாய் கண்டிருக்கிறேன். இந்த வேதப் புத்தகம் 'அந்தரலோக-ஏஞ்சல்' கதைத் தொகுப்பு அல்ல! இந்தப் புத்தகம், தேவனுடைய நித்தியமான சத்தியங்கள்! இன்றுள்ள கிறிஸ்தவத்தின் துயரம் என்னவென்றால், வேதாகமத்தை திவ்விய அதிகாரத்தோடு பேசும் பிரசங்கிகள் போதுமானவர்கள் இல்லை! என்பதுதான்.*

*– சகரியா பூணன்*

---

## 'அந்த ஏழை' பாக்கியவான்!

*ஈசாய் குடும்பத்தின் கடைசி மகன் தாவீது, ஓர் ஏழை! ஆடு மேய்த்திடும் மேய்ப்பன்! காட்டு மிருகங்கள் நிறைந்த இடங்களில் தன் மந்தையை மேய்த்த தாவீது* "**கர்த்தரே என் மேய்ப்பர்**" *என அவரையே சார்ந்து கொண்டு 'தாழ்ச்சி அடையாத வாழ்வை' கண்டடைந்தான்! (சங்.23). அவன் ராஜாவாய் மாறியபோதும் 'ஏழையாகவே' இருந்தான்! தனக்கிருந்த கோட்டை, துருகம், கேடகம் போன்ற யாதொன்றிலும் தன் நம்பிக்கையை வைத்திடாமல், "கர்த்தரே என் கோட்டை,*

*துருகம்....* **நான் நம்பிருக்கும் ராஜா"** *என முற்றிலும் சரணடைந்து கர்த்தருக்கு முன் 'ஏழையாகவே' நிலைத்திருந்தான்!*

**அவன் ராஜாவாய் மாறிய பின்பு "இந்த ஏழை கூப்பிட்டான்! கர்த்தர் கேட்டார்!" (சங்.34:6) என அவன் போற்றியதெல்லாம் "தான் இன்னமும் ஏழை" என்ற பாக்கியம்தான்!**

*இன்றோ, எங்கள் நாவுகளால் மேற்கொள்வோம்! எங்கள் உதடுகள் எங்களுடையது! என, தங்கள் தோழர்களிடம்கூட 'இருமனம் கொண்டு' இச்சகம் பேசுவோர் நடுவில் "ஏழையும், எளியவர்களுமாய்" இருந்திட சங்கீதம் 12:2-5 அழைக்கிறது! தங்கள் தோழருக்கு தீங்கிழைத்துவிட்டு, எங்களை ஜெயித்திட யார் உண்டு? என கூறும் பயமுறுத்தலைவிட, அதிகமான பயமுறுத்தல் ஏதும் இல்லை! (சங்.12:4). இவ்வித பாடுகளுக்குள் பிரவேசித்திடும் சமயத்தில் "வையப்படும்போது பதில் வையாமல், பாடுபடும்போது, பதிலுக்கு பயமுறுத்தாமலும்" இயேசுவைப்போல் நாவில் கபடு வராமல் தங்களை "ஏழையாய்" வைத்துக்கொண்டவர்கள் பாக்கியவான்கள்!*

*இதுபோன்ற "ஏழையைக் கண்ட" பரவசத்தில் "நான் இந்த ஏழையை, இந்த எளியவனைக் ..... காத்து, சுகமாயிருக்கப் பண்ணுவேன்" என கர்த்தர், அதே சங்கீதம் 12:5-ல் வாக்குரைத்தார்! அந்த வாக்கை நிலைநிறுத்துவதற்கு, அவர் கூறிய வாசகம் ஆச்சரியமானது!* **....இந்த ஏழையை காத்து, சுகமாயிருக்கப் பண்ணுவேன்.... என கர்த்தர் சொல்லிய வாக்கு, "மண்குகையிலே ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்கள்!" என அரிதியிட்டு கூறி உள்ளம் அகமகிழ்ந்தார்! (சங்.12:5,6).**

*எத்துன்ப நேரத்திலும், கர்த்தருக்கு முன்பாக "ஏழையாக" நிற்பது பாக்கியம்! மனுஷரால் நிந்திக்கப்பட்டு, அவமதிக்கப்பட்டு, பரியாசம் பண்ணப்படும் நேரத்தில், இயேசுவைப்போல் "நானோ, ஒரு புழு!" என்ற ஏழ்மைக்குள் வந்துவிடுவது பாக்கியம்! ஏனெனில் "கர்த்தரையே நம்பி இருந்த இந்த ஏழைகள்" ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை!! (சங்.22:5,6) என தேவனுடைய வார்த்தை கெம்பீரிக்கிறது! இவ்வித பாக்கியம் பெற்ற* **"ஏழைகள்" சபை கூடி வந்தால்,** *இந்த உலகம் அவர்களை "இயேசுவின் சீஷர்கள்" என வியந்து மகிழும்!*

*– T.ரத்தினகுமார்*

## St.ஆக்னஸ், (AD 291 - 304)

### தன் விசுவாசத்திற்கு மரித்த 13வயது இளம் பெண்!



ஓர் ரோமானிய பிரபு குடும்பத்தில் ஆக்னஸ் சகோதரி பிறந்தாலும், தன் பெற்றோர்களால் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ந்து வந்தாள். ஒரு பிரபு குடும்பத்தை சார்ந்தது மாத்திரமல்லாமல் மிகுந்த எழில் வடிவம் கொண்டிருந்தாள். ஆக்னஸ் 13 வயது நிரம்பியவுடன், அநேக பிரபு குடும்பத்து வாலிபர்கள் அவளை பெண் கேட்டு சென்றார்கள். புறஜாதியாயிருந்த அந்த பிரபு வம்சத்தினர் யாவரையும் தன் கிறிஸ்தவ விசுவாசத்தின்படி ஒவ்வொருவரையும் மறுத்து விட்டார்கள். அதில் ஆத்திரமடைந்த ஒரு வாலிபன், அவளை தான் அடைய முடியாததற்கு காரணம் "ஆக்னஸ் கிறிஸ்தவ விசுவாசத்தின் மீது கொண்ட உறுதியான பக்தி" என்பதை அறிந்து கொண்டார். அவன் விரைந்து ரோமானிய மார்க்க குழுவினரிடம் "இளம் பெண் ஆக்னஸ் கிறிஸ்தவ விசுவாசம் கொண்டவள்" என காட்டிக் கொடுத்து விட்டான்.

இதை விசாரித்த அதிபதி செம்ரோனியஸ், அவளை நிர்வாணப்படுத்தி, நடுரோட்டில் இழுத்து வந்து, யார் வேண்டுமானாலும் அவளை பயன்படுத்திக் கொள்ளும் வேசித்தன அறைக்குள் அடைக்கும்படி கட்டளையிட்டான். ஆக்னஸ் மிகுந்த விசுவாச உறுதியுடன் கண்ணீர் வடித்து ஜெபம் செய்தாள். அவளுடைய ஆடையை காம கொடூர தீய இளைஞர்கள் அவிழ்க்க அவிழ்க்க, ஜெபம் செய்து கொண்டிருந்த ஆக்னஸின் தலைமுடி வேகமாக வளர்ந்து அவள் முழு உடலையும் மூடிக் கொண்டது. இதையும் மீறி அவளை பலாத்காரம் செய்ய வந்த வாலிபர்கள் அனைவரும் கண் குருடாகி போய்விட்டார்கள். அதிபதி செம்ரோனியஸின் மகன் தீய எண்ணத்தோடு அவளை நெருங்கிய போது, அவன் அங்கேயே மரித்துப்போனான். மன உருக்கம் கொண்ட ஆக்னஸ், அவனுக்காக ஜெபித்தவுடன் அவன் உயிர் பெற்று ஓடிப்போனான். இதை அறிந்த செம்ரோனியஸ் அவளை தண்டிக்கும் பொறுப்பை வேறொரு அதிபதியிடம் ஒப்படைத்து விட்டான், அந்த அதிபதியோ ஒரு பெரும் சேனையுடன் ஆக்னஸை பிடித்து கொண்டுவந்து ஒரு தீக்கம்ப மரத்தில் கட்டி வைத்து விறகுகளை அடுக்கி தீக்கொழுத்தினான். அந்த விறகு மரங்கள் எவ்வளவு முயற்சித்தும் எரியாமல், சில எரிந்த தீப்பிளம்புகள் ஆக்னஸ் மீது ஒட்டாமல் விலகியே எரிந்தது. ஆத்திரமடைந்த போர்தலைவன் ஆக்னஸின் தொண்டயை கத்தியால் குத்தினான். பாய்ந்து வந்த இரத்த வெள்ளம் அவளை சுற்றிலும் தரையில் வழிந்தோடி, திரளாய் நின்று வேடிக்கை பார்த்த ஜனங்களில் அநேகர் கண்ணீர் மல்க ஆக்னஸ் ரத்தத்தை தங்கள் துணிகளில் தோய்த்து கொண்டு சென்றார்கள். தன் கற்பின் பூரண தன்மை காக்கப்பட்டாலும், கிறிஸ்துவின் மீது வைத்த விசுவாசத்திற்காக வீரமரணமடைந்தாள். அவள் நினைவாக பிரிட்டிஷ் மியூஸியத்தில் "இராஜ அந்தஸ்து தங்க கோப்பை" வைக்கப்பட்டுள்ளது.

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## வாலிபனே, நீ தேவன் தங்கும் ஆலயமாய் மாறிவிடு!

ஒரு கிறிஸ்தவ வாலிபன், இரயிலில் ஒருசமயம் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவனிருந்த அந்தப் பெட்டியில், சிலர் நேரத்தைப் போக்குவதற்காக சீட்டு விளையாடத் தொடங்கினார்கள். விளையாட்டிற்கு ஒரு ஆள் குறைந்தபடியால், மேற்கண்ட அந்த வாலிபனை அணுகி, அவனையும் சீட்டாட்டத்தில் கலந்து கொள்ள அழைத்தனர். அப்பொழுது அந்த வாலிபன் சொன்னது இதுதான்:

"அன்பான நண்பர்களே வருந்துகின்றேன், இந்த கரங்கள் எனக்குரியவைகள் அல்ல, இதை இறைவன் இயேசுவுக்கு கொடுத்து ஒரு வருடம் ஆகிறது!" என்றாராம். தேவனுக்கே புகழ் உண்டாகட்டும்!

பரிசுத்த வேதாகமம், நமது சரீரத்தை தேவனுடைய ஆலயமென்றே குறிப்பிடுகின்றது. "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்! தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்" என்றே எழுதப்பட்டுள்ளது! (1கொரிந்தியர் 3:16,17).

வாலிபனே, உன் சரீரத்தை உனக்காக வைத்திருப்பது அபாயம்! 'உன் இஷ்டம்' என கூறும் 'சுய சித்தம்' கேட்டின் பாவ இன்பத்திற்குள் நடத்தி, உன்னை மோசம் போக்கும்! உன்னை, தன் ஆலயமாய் மாற்றுவதற்கே உயிர் தந்த இரட்சகரிடம் வந்து, பாவியாகிய நீ இரட்சிக்கப்பட்டு, அவர் வந்து வாசம் செய்யும் தேவனுடைய ஆலயமாய் இன்றே மாறிவிடு! அப்போது, உன் ஆத்துமா கெட்டுப்போய் அழியாமல், தெய்வம் வாசம் செய்திடும் நித்திய ஜீவனைப் பெற்று 'பேரானந்தம்' பெறுவாய்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.